செ.வெளியீடு:103 6/10/08

# பத்திரிகைச் செய்தி

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களது வழிகாட்டுதலின்படி பனைத் தொழிலாளர்களுடைய பிரச்சனைகளை ஆராய்ந்து அவர்களது பிரச்சனைகள் அனைத்தையும் நீக்கும் வகையில் சில முடிவுகளை எடுப்பதற்காக 30.10.2008 அன்று மதுரை காந்தி மியூசியத்தில் மாண்புமிகு கதர் துறை அமைச்சர் தலைமையில் ஒரு கூட்டம் நடைப்பெறவுள்ளது.

அதில் தொழிலாளர்கள் பனை மரத்திலிருந்து இறக்குகிற அனைத்து பதனீரையும் அரசே வாங்குவதற்கான திட்டமும் விற்க முடியாத பதனீரை கருப்பட்டியாக மாற்றி அதை விற்பதற்கான திட்டங்களும் விவாதிக்கப்படும்.

இந்த கூட்டத்தின் மூலம் பதனீர் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் பிரச்சனை முழுவதும் அரசு தீர்வு காண்பதற்கு திட்டங்கள் வகுப்பப்படும்.

இக்கூட்டத்தில் தமிழகத்திலுள்ள ஆரம்ப பனை வெல்ல கூட்டுறவு சங்கங்களின் தனி அலுவலர்களும் மற்றும் சம்மேளன தனி அலுவலர்களும் கலந்து கொள்கிறார்கள். என கதர் துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

கதர் துறை அமைச்சர் 6/10/08
தலைமைச் செயலகம், சென்னை-600 009.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை - 6.10.08